**எல்ல பிரதேச சபை - 2022**

------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எல்ல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் எல்ல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதி ரூபா 394,080,224 ஆக இருந்த போதிலும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமான பங்களிப்புக் கணக்கில் ரூபா 394,379,690 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 9,903,307 தொகையில் உள்ளடக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய ரூபா 918,813 தொகை நடைமுறைப் பொறுப்பாக ஒதுக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் போது புகையிரத ஆணைச்சீட்டுக்காக செலுத்த வேண்டிய ரூபா 50,750 மற்றும் வழங்குநரின் பதிவு செய்தல் செய்திப் பத்திரிகை அறிவித்தலுக்கு செலுத்த வேண்டிய ரூபா 25,599 தொகை என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுப்பெறுமதி ரூபா 328,799,949 ஆன 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக உரித்தினை உறுதிப்படுத்தும் ஆவணங்கள், மதிப்பீட்டு அறிக்கை, பதிவேடுகளின் பௌதிக இருப்பு மற்றும் பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | | | |
| (அ) 132(ஓ) பிரிவு | மீளாய்வாண்டின் போது விகாரை ஒன்றின் தர்ம மண்டபத்திற்காக வர்ணம் பூசுதல் மற்றும் கோவில் ஒன்றில் வர்ணம் பூசுவதற்காக அமைச்சரின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமை ரூபா 256,982 செலவிடப்பட்டிருந்தது. | பதிவு செய்த சங்கங்களின் மூலம் உடன்படிக்கை செய்து உரிய பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. | மத ஸ்தானங்களுக்காக வழங்கப்படுகின்ற நிதி உதவிகள் மற்றும் செலவினங்களுக்காக விடயப் பொறுப்பு அமைச்சரின் முன் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |
| (ஆ) 182 பிரிவு | விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்காரமின்றி ரூபா 1,252,000 நீர் வரி பதிவழிக்கப்பட்டிருந்தது. பதிலளிக்கப்படவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | அறவிட வேண்டிய பணத்தைக் கைவிடும் போது சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 4,873,204 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 1,817,225 ஆகும்.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரி | 8,755,800 | 8,192,102 | 4,332,323 | **3,859,779** | 9,306,000 | 8,677,500 | 3,022,013 | **5,655,487** |
| (ii) | வாடகை | 900,000 | 952,285 | 489,529 | **462,756** | 900,000 | 1,014,600 | 442,625 | **571,975** |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,572,200 | 985,000 | 985,000 | **0** | 1,525,000 | 1,018,220 | 1,018,220 | **0** |
| (iv) | ஏனைய வருமானம் | 17,767,000 | 17,022,080 | 6,163,800 | **10,858,280** | 21,320,000 | 15,107,339 | 12,866,590 | **2,240,749** |
| | மொத்தம் | **28,995,000** | **27,151,467** | **11,970,652** | **15,180,815** | **33,051,000** | **25,817,659** | **17,349,448** | **8,468,211** |

**2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்பு** | | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3,274 ஆதன வரி அலகுகளில் இருந்து அறவிட வேண்டிய ரூபா 13,117,977 ஆதனவரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை ஆதன வரியை விரைவாக அறவிடல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு வாடகைக்கு வழங்கப்பட்ட 28 கடைகளில் இருந்து ரூபா 591,764 நிலுவைக் கடை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வாடகையை அறவிடுவதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | நிலுவைக் கடை வாடகையை விரைவாக அறவிடல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்**

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2008 ஆம் ஆண்டு முதல் பேணிச் செல்லப்படுகின்ற கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்கும், 2020 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட சுடலைக் கூடத்திற்கும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுடலை கூடம் மற்றும் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்கு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெறப்படல் வேண்டும். |
| (ஆ) | பிரதேசத்தின் வீதிகளை திருத்தி அமைத்தல் மற்றும் போதியளவான மலசல கூட வசதிகளை வழங்குவதற்கு பிரதேச சபையால் நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்த போதிலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு கணிசமான அளவில் வருகை தருகின்ற எல்ல பிரதேசத்தில் 09 ஆறுக்கு பாலம் மற்றும் புஞ்சி ஸ்ரீபாத இற்கான நுழைவு வீதி அபிவிருத்தி செய்யப்படாதிருந்ததுடன் மலசலகூட வசதிகளும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | காணி விடுவித்தல் பிரச்சினைகளின் காரணமாக இந்த இடத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் கைவிடப்பட்டுள்ளது. | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் வீதிகளை திருத்தில அமைத்தல் மற்றும் மலசல கூட வசதிகளை வழங்குதல் வேண்டும். |
| (இ) | சபையினால் பொது மக்களுக்கு குடி நீர் வழங்குவதற்கு பேணிச் செல்லப்படுகின்ற 23 நீர் செயற்றிட்டங்கள் நீர் பயன்பாட்டிற்கு அருகதையாக உள்ளமைக்கு நீர் மாதிரிகளைப் பரீட்சித்து உறுதிப்படுத்தல் பெறப்பட்டிருக்கவில்லை. | நீர் மாதிரிகளைப் பரீட்சித்து அறிக்கை பெற்றுக் கொள்வதற்கும் அதில் குறிப்பிடப்பட்ட ஆலோசனையின் படி செயற்படுதவ்றகும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பயன்பாட்டிற்கு பொருத்தமான நீரை வழங்குதல் வேண்டும். |
| (ஈ) | கட்டிடத்தில் பாதுகாப்பற்றிருந்தமையின் காரணமாக சபைக்குரிய உடற்பயிற்சி நிலையத்தின் நடவடிக்கைகள் 2021 பெப்ரவரி 19 ஆந் திகதியின் பின்னர் நிறுத்தப்பட்டிருந்ததுடன் அதில் உபகரணங்கள் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் காதுகாப்பின்றியும் விலைவற்றும் சபையில் காணப்பட்டது. | தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் கட்டடம் தொடர்பான பரிந்துரை வழங்கப்படும் வரை கட்டிடம் பயன்படுத்தப்படவில்லை. உடற்பயிற்சி நிலையத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு சபை கவனம் செலுத்தி உள்ளது. | விளைவற்ற சொத்துக்களை பயன்பாட்டிற்கு எடுத்தல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 52 ஆம் பிரிவின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் போது அதிகாரப் பிரதேசத்தில் அனுமதியற்ற 10 நிர்மாணங்கள் தொடர்பாக தொழில்நுட்ப உத்தியோகத்தரால் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதியற்ற நிர்மாணங்களுக்காக வீடுகள் மற்றும் நகர கட்ளைச் சட்டத்தில் வழக்கு தொடராமல் இருந்ததுடன் இது தொடர்பாக பல்வேறு சந்தர்ப்பங்களில் கலந்துரையாடிய போதும் இதற்காக எந்தவொரு பதிலும் கிடைத்திருக்கவில்லை. | அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டின் போது பிரதேச அபிவிருத்தி உதவி செயற்றிட்டத்தின் நிதியத்தில் ரூபா 490,500 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட தொற்றுநீக்கி திரவம் லீற்றர் 545 காலாவதியாகி பிரதேச சபை களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. | இந்த தொற்றுநீக்கி திரவத்தின் ஒரு பகுதி சுகாதார சிகிச்சை அலகு மற்றும் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. அலுவலகத்தை சுத்திகரிக்கும் நடவடிக்கைகள் / மலசல கூடங்களை சுத்திகரிப்பதற்காகவும் பயன்படுத்தப்படுகின்றது. | அத்தியவசியமான கொள்வனவுகளை கொள்வனவு செய்தல் வேண்டும். |